**தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம்,**
**(ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் பின்புறம்)**
**சென்னை - 600 035. தொலைபேசி எண்: 044-29515590**

**காணொளிகாட்சி விசாரணை (Video Conference)**
**ஆணை நாள்: 04.06.2025**

**முன்னிலை**
**முனைவர் மா.செல்வராஜ் எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

…………

**வழக்கு எண். SA2130/F/2025**

திரு R.ரெங்கராஜ் பாலண்டார் ... மனுதாரர்

/ எதிர் /

பொது தகவல் அலுவலர்,
கோட்டப்பொறியாளர்,
கோட்டப்பொறியாளர் அலுவலகம்,
நெடுஞ்சாலைத் துறை, க(ம)ப,
சிவகங்கை வட்டம்,
சிவகங்கை மாவட்டம் - 630561 ... பொது அதிகார அமைப்பு

******

## ஆணை

மேற்குறிப்பிட்ட வழக்கு 04.06.2025 அன்று இவ்வாணையத்தால் காணொளிகாட்சி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு R.ரெங்கராஜ் பாலண்டார் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.எஸ்.கே.ஆர்.சந்திரன், பொதுத் தகவல் அலுவலர் மற்றும் கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, சிவகங்கை வட்டம், சிவகங்கை மாவட்டம் - 630561 அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 13.11.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், சிவகங்கை மாவட்டம், நெடுஞ்சாலைத்துறை, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு துறையில் 01.03.2024 முதல் 13.11.2024 வரை தார்சாலை பராமரிப்பு (பேஜ் ஒர்க்) பற்றிய ஆவணங்களின் நகல், புதிய சாலைகள் மற்றும் பாலங்கள் மற்றும்

சுரங்கப்பாதை அமைக்க விடப்பட்ட டெண்டரில் கலந்து கொண்டவர்களில் அதில் தேர்வு செய்யப்பட்ட டெண்டர் தாரர்களுக்கான ஆவண நகல், கோட்டப்பொறியாளர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்கள் கள ஆய்வறிக்கை, கோட்டப்பொறியாளர் கையொப்பமிட்ட கோப்பு தொடர்பான தகவல்களை 4 இனங்களில் வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்காத காரணத்தால் மனுதாரர் 17.12.2024 நாளிட்ட பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் 24.01.2025 நாளிட்ட பிரிவு 19(3)இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 04.06.2025 அன்று இவ்வாணையத்தால் காணொளிகாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து தான் முழுமையான தகவல்களைப் பெற்றுக் கொண்டதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்களை ஏற்கனவே 02.06.2025 அன்று காலை 10.30 மணி முதல் மதியம் 1.15 மணி வரை தகவல்களுக்குரிய ஆவணங்களை பார்வையிட்டு பெற்றுக் கொண்டதாகவும், மனுதாரர் மேல்நடவடிக்கை தேவையில்லை எனத் தெரிவித்து 02.06.2025 நாளிட்ட கடிதத்தினை வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார். அதனடிப்படையில், இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஓம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA2130/F/2025**

**பெறுநர்**

பொது தகவல் அலுவலர்/ கோட்டப்பொறியாளர்,
கோட்டப்பொறியாளர் அலுவலகம்,
நெடுஞ்சாலைத் துறை, க(ம)ப,
சிவகங்கை வட்டம், சிவகங்கை மாவட்டம் - 630561

**மனுதாரர்**

திரு R.ரெங்கராஜ் பாலண்டார்,
வெங்கங்குடி கள்ளர் தெரு,
பள்ளிவிடை அஞ்சல்,
மணச்சநல்லூர் வட்டம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்
621112

Copy to: Judgement File/ Spare.
JE / PA 04.06.2025.